சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.68/2021

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19-ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889 ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44 வது பிரிவு 5 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.N.கௌரிமாரியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – வீரன் (Pw1) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படிக்க கேட்டு கைரேகை செய்துள்ளேன். அதில் உள்ள கைரேகை என்னுடையதுதான். என் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு 14.02.2006 ம் தேதியிட்ட வாதிக்கு , க.லெட்சுமி எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் கிரைய ஆவணஎண்.139/2006 அசல் **வா.சா.ஆ.1**. 23.10.2020 ம் தேதியிட்ட தாவா சொத்துக்களுக்கு வாதி பெயரில் உள்ள பட்டா, பட்டா எண். 758 கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ 2**. 03.09.2019 ம் தேதியிட்ட தாவா சொத்துக்களுக்கு வாதியானவர் செலுத்திய தீர்வை ரசீது, ரசீது எண். 731647 அசல் **வா.சா.ஆ 3.** 19.10.2020 ம் தேதியிட்ட தாவா சொத்துக்களுக்கு வாதியானவர் செலுத்திய தீர்வை ரசீது, ரசீது எண். 748619 அசல் **வா.சா.ஆ 4**. 03.11.2020 ம் தேதியிட்ட தாவா சொத்துக்களுக்குரிய வில்லங்க சான்றிதழ் சார்பதிவக நகல் **வா.சா.ஆ 5**. 08.01.2007 ம் தேதியிட்ட தாவா சொத்துக்களின் பகுதி சொத்தை பொறுத்து 1 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதிக்கு மோசடியாக எழுதிக்

கொடுத்துள்ள கிரைய பத்திரம் ( ஆவண எண்.13/2007) சார்பதிவக நகல் **வா.சா.ஆ 6**. 08.01.2007 ம் தேதியிட்ட தாவா சொத்துக்களின் பகுதி சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு மோசடியாக எழுதிக் கொடுத்துள்ள கிரைய பத்திரம் ( ஆவண எண்.14/2007) சார்பதிவக நகல் **வா.சா.ஆ 7**. 08.01.2007 ம் தேதியிட்ட தாவா சொத்துக்களின் பகுதி சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு மோசடியாக எழுதிக் கொடுத்துள்ள கிரைய பத்திரம் (ஆவண எண்.15/2007) சார்பதிவக நகல் **வா.சா.ஆ 8.** தாவா சொத்துக்களுக்குரிய வழிகாட்டுதல் மதிப்பு சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ 9**. பல தேதிகளிட்ட தாவா சொத்துக்களுக்கு வாதி பயர் பாதுகாப்பு தீர்வை ரசீதுகள் எண்ணம் 3 அசல் **வா.சா.ஆ 10**. 11.07.2025 ம் தேதியிட்ட தாவாச் சொத்துக்களுக்கு வாதி பயிர் பாதுகாப்பு தொகை செலுத்திய ரசீது மற்றும் ஆவணங்கள் அசல் **வா.சா.ஆ 11**. 15.12.2023 ம் தேதியிட்ட தாவாச் சொத்துக்களுக்கு வாதி பயிர் பாதுகாப்பு தொகை செலுத்திய ரசீது மற்றும் ஆவணங்கள் அசல் **வா.சா.ஆ 12.** 18.11.2022 ம் தேதியிட்ட தாவாச் சொத்துக்களுக்கு வாதி பயிர் பாதுகாப்பு தொகை செலுத்திய ரசீது மற்றும் ஆவணங்கள் அசல் **வா.சா.ஆ 13**. 21.10.2015 ம் தேதியிட்ட 1425ம் பசலிக்கு தாவாச் சொத்துக்களுக்கு வாதி பெயரில் சாகுபடி அடங்கல் கணக்கு கிராம நிர்வாக அலுவலர் அளித்தது அசல் **வா.சா.ஆ 14**. 03.04.2022 ம் தேதியிட்ட சர்வே எண். 555–க்கு உரிய புல வரைபடம் கணினி நகல் **வா.சா.ஆ 15.** பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.